# பெருவெள்ளம் - விலங்குகள் மற்றும் பூச்சிகளின் ஆபத்து

பெருவெள்ளத்திற்குப் பின்னர் விலங்குகள் மற்றும் பூச்சிகளை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றிய தகவல்

**Tamil | தமிழ்**

**OFFICIAL**

பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி ஒன்றிற்குத் திரும்பும்போது, கொறித்துண்ணிகள், பாம்புகள் அல்லது சிலந்திகள் உள்ளிட்ட காட்டு விலங்குகள், உங்கள் வீடு, கொட்டகை அல்லது தோட்டத்தில் சிக்கியிருக்கலாம்.

## பாம்புகளைச் சமாளித்தல்

- வீட்டுக்கு வெளியே உள்ள இடங்களில் இருக்கும்போது:
  - ✓ உங்கள் கால்களைப் பாதுகாக்க, காலினை மூடும் உறுதியான காலணிகள் (பூட்ஸ்), கையுறைகள் மற்றும் நீண்ட காற்சட்டைகள் ஆகியவற்றை அணியுங்கள்.
  - ✓ பெருவெள்ளத்திற்குப் பின்னர் சுத்தம் செய்யும்போது, உங்கள் கைகள் மற்றும் கால்களில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.
  - ✓ நீங்கள் ஒரு பாம்பைக் கண்டால், பின்வாங்கி நின்று, அதை அதன் வழியில் செல்ல விடுங்கள் - அதைத் தொடவேண்டாம்.
  - ✓ தண்ணீரில் பாம்புகள் நீந்தக்கூடும் என அறிந்து விழிப்புடன் இருங்கள்.
  - ✓ பாம்புகள், சிலந்திகள் மற்றும் கொறித்துண்ணிகளை ஈர்க்கக்கூடும் என்பதால், உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள கழிவுகளை நீங்கள் அகற்றவேண்டும்.

- உங்கள் வீட்டில் ஒரு பாம்பைக் கண்டால், பீதி அடையாமல், மெதுவாக அதிலிருந்து பின்வாங்கி, அதை அதன் வழியில் செல்ல விடவும். அதைத் தொடவேண்டாம். உங்கள் பகுதியிலுள்ள பாம்பு பிடிப்பவர்களின் பட்டியலுக்கு, 'சுற்றுச்சூழல், நிலம், நீர் மற்றும் திட்டமிடல் துறை'யை (Department of Environment, Land, Water and Planning) 136 186 என்ற எண்ணில் அழைக்கவும்.
- உங்களுக்கு பாம்பு கடித்தால்:
  - ✓ பாம்பு கடித்த இடத்தைச் சுற்றியுள்ள தோலைக் கழுவவேண்டாம்.
  - ✓ அசையாமல் இருங்கள், அத்துடன் 000-ஐ அழைப்பதன் மூலம் அவசர மருத்துவ உதவியைப் பெறுங்கள்.
  - ✓ உங்கள் இதயத்தின் மட்டத்திற்குக்கீழே கடிபட்ட பகுதி இருக்குமாறு கீழே படுத்துக்கொள்ளவும் அல்லது உட்காரவும்.
  - ✓ சுத்தமான மற்றும் உலர்ந்த காயக்கட்டுத் துணியால் அந்தப் பகுதியை மூடவும். கிடைக்கக்கூடியவாறு இருந்தால், கடிபட்ட பகுதியைச் சுற்றி ஒரு உறுதியான காயக்கட்டை (பன்டேஜ் - bandage) போட்டுக்கொள்வதும் பரிந்துரைக்கப்படுகிறது.
  - ✓ கடிபட்ட நேரத்தையும், கட்டு எப்போது போடப்பட்டது என்பதையும் கவனித்துக்கொள்ளுங்கள்.

- ✓ குருதிப்போக்குத் தடுப்புக் கட்டு (tourniquet) ஒன்றைப் பயன்படுத்தவோ, விஷத்தை வெளியகற்ற கடிபட்ட இடத்தை வெட்டவோ, அல்லது காயத்திலிருந்து விஷத்தை உறிஞ்ச முயற்சிக்கவோ வேண்டாம்.

## சிலந்திகளைச் சமாளித்தல்

- உங்களுக்கு சிலந்தி கடித்தால்:
  - ✓ கடிபட்ட பகுதியைக் கழுவி, வலிக்கு உதவும் வகையில் பனிக்கட்டிப் பொதிகளை (ஐஸ் பக்ஸ் - ice packs) பயன்படுத்தவும்.
  - ✓ அழுத்தம் கொடுக்க வேண்டாம்.
  - ✓ உங்களுக்கு 'ரெட்பேக்' (redback) சிலந்தி கடித்தால், அல்லது உங்கள் அறிகுறிகள் மோசமடைந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுங்கள்.

## கொறித்துண்ணிகள் மற்றும் பூச்சிகளைச் சமாளித்தல்

- சுண்டெலிகள் மற்றும் எலிகள் போன்ற கொறித்துண்ணிகள், நோய்களைச் சுமக்கின்றன. கொறித்துண்ணிகளுக்கு தங்குமிடம் வழங்கக்கூடிய உணவு மற்றும் பிற பொருட்களை நீங்கள் அகற்றவேண்டும்.
- குப்பைகளை அகற்றவும், அத்துடன் குப்பைத் தொட்டியின் மேல் ஒரு மூடியை இடவும். தேவைப்பட்டால், கொறித்துண்ணிகளுக்கான பொறிகளை ஈரம் இல்லாத பகுதிகளில் வையுங்கள்.
- தேங்கி நிற்கும் தண்ணீரில் நுளம்புகள் (கொசுக்கள்) பெருகும் என்பதால், அதிலிருந்து விலகியிருக்கவும். உங்கள் உடலை முடிந்தவரை மூடவும், அத்துடன் கொசு விரட்டியை (mosquito repellent) பயன்படுத்தவும்.
- ஈக்கள் நோய்களைச் சுமக்கின்றன. ஈக்கள் பெருகும் இடமாக உள்ளதால், உணவுக் கழிவுகளை உடனடியாகச் சுத்தம் செய்யவும்.
- விலங்கு ஒன்றால் கடிக்கப்பட்டால் அல்லது காயப்பட்டால், அல்லது பூச்சியால் கொட்டப்பட்டால், உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறவும், அல்லது வாரத்தில் 7 நாட்களும் ஒரு நாளில் 24 மணி நேரமும் செயற்படும் NURSE-ON-CALL-ஐ 1300 60 60 என்ற எண்ணூடாக அழைக்கவும்.

இந்த வெளியீட்டை அணுகக்கூடிய வடிவத்தில் பெற, pph.communications@health.vic.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.